Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 9
இதழ் 299
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க கார்த்திகை 22 ரமழான் 5 வெள்ளிக்கிழமை (8-12-67)

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# வவுனிக்குளம் உடைப்பு 800 பேர் மீள முடியாமல் தவிப்பு

## உதவியளிக்க கடற் படையிடம் பட கில்லை

### வெள்ளம் புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி நடவடிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

வவனிக்குளத்தின் இடதுகரைக்கட்டு உடைப்பெடுத்துவிட்டது. வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு சுமார் 800 பேருக்கு மேல் வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளனர். அவர்களை மீட்டுப் பாதுகாப்பான இடங்களில் சேர்ப்பதற்கான வழிவகைகள் எதுவும் கிடைக்கவில்லை. கடற் படையினரிடம் படகு தருமாறும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ள மக்களைக் காப்பாற்றிக் கரைசேர்க்குமாறும் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா வேண்டுகோள் விடுத்தார். ஆயினும் தங்களிடமுள்ள படகுகள் பழுதடைந்திருப்பதாக அவர்கள் தெரிவித்துவிட்டனர்.

வன்னேரிக்குளமும் உடைப்பெடுத்துப் பெருகிக்கொண்டிருக்கிறது. முரசுமோட்டை, உருத்திரபுரம், அக்கராயன்குளம் பகுதிக் குடியேற்றத்திட்டங்களில் குடியேறியுள்ள மக்கள் வெள்ளத்தினால் சூழப்பட்டு நிர்க்கதியான நிலையிலுள்ளனர்.

## ரயில், பஸ் சேவைகள் ரத்து; சினிமாக்காட்சிகள் இல்லை

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கு உதவி அளிப்பதற்கான நடவடிக்கைகளை அவ்வப்பகுதி அரசாங்க அதிபர்களின் உத்தரவின் மீது காரியாதிகாரிகளும் கிராம சேவையாளர்களும் மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் மற்றும் வெளியூர்களுக்கும் நேற்று முழுநாளும் ரயில், பஸ் சேவைகள் நடைபெறவில்லை பளையிலிருந்து யாழ்ப்பாணத்துக்குவழமையாக காலையில் 6-58க்கு வந்து சேரும் முதல் ரயில் முற்பகல் 11-45க்கு வந்து சேர்ந்தது. பின்னர் காங்கேசன்துறைக்கும் பளைக்குமிடையில் இரண்டொரு ரயில் சேவைகள் நடைபெற்றன. பலாலிமார்க்கமாக பருத்தித்துறைக்கு ஒரேயொரு பஸ் சேவை நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாண நகரிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள இதர பகுதிகளுக்கோ வெளியூர்களுக்கோ பஸ் சேவைகள் எதுவும் நடைபெறவில்லை.

## நோய் தடுப்பு நடவடிக்கை

வடக்கு, கிழக்கு மற்றும் வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளிலுள்ள மக்கள் தண்ணீரைக் கொதிக்க வைத்து ஆறியபின் அருந்தவேண்டுமென்றும் பேதி, நெருப்புக் காய்ச்சல், மலேரியா தடுப்பு ஊசி, மருந்து முதலியவைகளை எடுக்கவேண்டுமென்றும் ஆலோசனை கூறப்படுகிறது.

## லட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியான நெசவுநூல்

யாழ்ப்பாணம் தபால் நிலையம், பொலிஸ் நிலையம், கச்சேரி முதலிய அரசாங்க காரியாலயங்களிலும் நேற்று வெள்ளம் சூழ்ந்திருந்தது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நெசவாளர் சங்கங்கள் தனிப்பட்ட நெசவாளர் உட்பட சுமார் 3,600 நெசவாளர்களுக்கு, ஆடை உற்பத்தி செய்வதற்காக நெசவு நூல் வழங்கும் யாழ்ப்பாண ஐக்கிய நெசவாளர் சங்கத்தின் தலைமைக்காரியலமும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டது. இக்காரியாலயத்தினுள் வெள்ளம் புகுந்ததால் லட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியான நெசவு நூலும் நெய்யப்பட்ட துணிகளும் வெள்ளத்தில் நனைந்து சேதமடைந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

## நாகையில் புயல்

சென்னை, டிச. 7

இன்று பிற்பகல் பாம்பனுக்கு 150 கிலோ மீட்டருக்கு அப்பால் மையம் கொண்டிருந்த புயல் நாகப்பட்டினம், தொண்டி ஆகிய இடங்களில் இன்று நள்ளிரவு வீசக்கூடுமென் ம்வாநிலை அவதான நிலையம் தெரிவித்தது.

## நிஜலிங்கப்பா காங்கிரஸ் தலைவர்

புதுடில்லி, டிச.7

அகில இந்திய காங்கிரஸ் தலைவராக மைசூர் முதல் மந்திரி திரு. நிஜலிங்கப்பா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## மட்டக்களப்பில் 3000 பேர் வீடிழந்தனர்

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பில் தொடர்ந்து பெய்துவரும் பெரு மழை காரணமாக பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இங்கு 3000 பேர் வீடிழந்துள்ளனர். இவர்களுக்குப் பொது இடங்களில் புகலிடமளிக்கப்பட்டுள்ளது. வெள்ள அகதிகளுக்கு உணவு முதலியன வழங்க மட்டக்களப்பு அரசாங்க அதிபரும் சமூக சேவைப் பகுதியினரும் சமூகத் தொண்டர்களும் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

பெரு வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மற்றப் பகுதிகளிலிருந்து தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

### மற்றப் பகுதிகளில்

அநுராதபுரம், மதவாச்சி புத்தளம், வவனியா ஆகிய பகுதிகளிலும் கடும் மழை பெய்துகொண்டிருக்கிறது. இங்கு பல குளங்கள் உடைக்கப்பட்டன.

## அகதிகளுக்கு அரிசி, சீனி தேயிலை, மாவு விநியோகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்டபகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை அவ்வப் பகுதியிலுள்ள கிராம சேவகர்கள் சென்று பார்வையிட்டனர். நேற்றுப் பிற்பகல் அகதிகளாயுள்ளவர்களுக்கு 2 றுத்தல் அரிசி, ஒரு றுத்தல் மா, கால் றுத்தல் சீனி, அரை அவுன்ஸ்தேயிலை என்பனவற்றை இலவசமாக வழங்கும் பர்மிட் வழங்கினர். பர்மிட் கிடைத்தவர்கள் தாம் கட்டுப்பாட்டுச் சாமான்கள் வாங்கும் கடைகளிலோ அன்றேல் சங்கக் கடைகளிலோ இப்பொருட்களைப் பர்மிட் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

அரசாங்க ஊழியர்கள் எவருக்கும் பாமிட் பத்திரம் வழங்கப்படவில்லையெனத் தெரிகிறது. ஆனால் அகதிகளாகவுள்ளவர்கள் கூப்பனை வெள்ளத்தின் காரணமாக இழந்திருந்தால் அவர்களுக்கு இலவச உணவுச் சாமரன்கள் வழங்கப்படவில்லையென்றும் தெரிகிறது. (நி

## நள்ளிரவில் 3 மணிநேரம் பெருமழை பேய்க்காற்று

நேற்று முன்தினம் அதாவது புதன்கிழமைநள்ளிரவு தாண்டியதும் சுமாராகப் பெய்துகொண்டிருந் மழை சோனவாரியாகப் பொழிந்துதள்ளத் தொடங்கியள். அதிகாலை சுமார் இரண்டு மணியளவில் திடீரென்று பேரிரைச்சலுடன் பேய்க்காற்று வீசத்தொடங்கியது. அதிகாலை 2 மணியிலிருந்து காலை 5 மணி வரை பத்துப்பதினைந்து நிமிடங்களுக்கு பேரிரைச்சலுடன் பெருமயையும் அதைத் தொடர்ந்து பேய்க்காற்றும் வீசி மழையும் காற்றுமாக மாறிமாறி பேயாட்டம் போட்டுக் கொண்டிருந்தன.

குளங்கள் வாய்க்கால்கள் நிரம்பி வழிந்து வீதிகள் வீடுகள், வளவுகள் எங்கும் வெள்ளக்காடாகிக் கொண்டிருந்தன. இதே சமயம் காற்றுக்குத் தலைசாய்ந்து தென்னை மரங்கள் பனைமரங்கள் மற்றும்பெரிய ஆல் அரசு வேம்பு போன்ற மரங்களும் அடிசாய்ந்து கொப்பு கிளைகளுமாக முறிந்தும் விழுந்தும கொண்டிருந்தன.

இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டதும் மிளகாய். வெங்காயம், உருளைக்கிழங்கு முதலிய உப உணவுச்செய்கைகளில் யாழ்மாவட்ட விவசாயிகள் ஈடுபட்டனர். கடும்மழையும் வெள்ளமும் காற்றும் உப உணவுப்பொருள் உற்பத்தியை பாதித்துவிட்டது.

## ஒரே நாளில் 13 அங்குல மழை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் சென்ற ஒன்பது தினங்களில் 32 அங்குல மழைபெய்திருக்கிறது. நேற்றுமுன்தினம் மட்டும் இங்கு 13 அங்குல மழை பெய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சத்தியம் என்கின்ற வலுவான அத்திபாரத்தின் மேல்தான் உலகம் நிற்கிறது. அசத்தியம் என்பது இல்லாதது. ஆகையால் அதன் வெற்றிக்கு இடமேயில்லை. சத்தியம் நிலைநிற்பது. ஆகையால் அதை அழிக்கவே முடியாது.

— காந்தி மகான்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் கார்த்திகை மாதம்22ம்திகதி [8-12-67]

## யாழ்ப்பாண வெள்ளம்

நாற்பது வருடங்களில் காணாத வெள்ளம், யாழ்ப்பாண குடாநாட்டில் இப்போது ஏற்பட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்து குழந்தை குட்டிகளுடன் தவிப்பது பெரிய கண்ணருவி.

உடனடியாக அவர்களுக்கு உதவிஅளிக்க அரசாங்க அதிபர் சில ஏற்பாடுகளைச் செய்துள்ளார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இலவச அரிசி, மாவு, சீனிமுதலியவற்றை விநியோகிக்க ஒழுங்கு செய்துள்ளதாகத் தெரிகிறது-இது நல்லதே.

ஆனால வீடு வாசல், சாமான்கள் எல்லாம்இழந்து தெருவில் நிற்கும் குடும்பங்கள் அந்த அரிசியைக்கொண்டு எங்கு எப்படிச் சமைப்பது?இவ்வித நிலையில் அரசாங்கத்தை மட்டும்நம்பி இராமல், ஆங்காங்கே தர்ம சிந்தையுள்ள பொது மக்கள், கோவில்கள், சர்ச்சுகள்,முதலிய ஸ்தாபனங்கள் மூலம் உணவு சமைத்து, இக்குடும்பங்களுக்கு உதவுவது பெரிய தர்மமும் புண்ணியமுமாகும்.

வீடு வாசல், பயிர்பச்சைகள் முதலியவற்றை இழந்து நஷ்டப்பட்ட ஏழைகள் அதிகம். ஏழைகளாயினும் அவர்கள் தன்மானமுள்ளவர்கள். வாய்விட்டு யாரையும் உதவி வேண்டுமென்று கேட்கமாட்டார்கள். அரசாங்கம் இதைப்பற்றி விசாரித்தறிந்து, அவர்கள் மீண்டும் மானத்துடன் வாழ்க்கை நடத்தஅவர்களுக்கு வேண்டிய உதவித் தொகையை அளிப்பது அவசரமும் அவசியமுமாகும். வசதியுள்ள பொது மக்கள் கூடுமான உதவி செய்து புண்ணியம்சம்பாதிக்க இது அரியதோர்சந்தர்ப்பம்.

வரட்சிப்ப குதியான யாழ்ப்பாணக்குடாநாட்டில் இப்படியான வெள்ளம் வந்து பெருஞ்சேதம் விளைவித்துள்ளதை, வெளியார் சுலபமாக நம்பமாட்டார்கள். சிறப்பாக யாழ்ப்பாண நகரத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் முழ்கி, மக்களை அவதிப்படுத்தியுள்ள தென்பதைக் கேட்டு ஆச்சரியப் படுவர். திட்டமிட்டு முன் யோசனையுடன் காரியங்களைச் செய்தால் மக்களின் கஷ்டங்களை வெகுவாகக்குறைக்க முடியும்.

சரிவர யாழ்ப்பாண நகரில் சாக்கடை, வடிகால் திட்டமுல்லை, மழை சிறிதளவு பெய்தாலும் ரஸ்தாக்களிலும், குளங்களிலும் தண்ணீர் நிரம்பி வெள்ளமாகி விடுகிறது. அதிகப்படியான மழைத் தண்ணீர் கடலில் பாய்ந்து வீணாகாமல் ஆங்காங்கே குடாநாட்டின் தூர்ந்துபோன.குழங்களை ஆழமாகவருடாவருடம்வெட்டிப் பள்ளமாக்கினால், பல விதங்களிலும் அது உதவியாக இருக்கும். வெள்ளச் சேதங்களும் குறையும்.

நகரில் பல பல இடங்களிலும் சாக்கடைகள் அடைபட்டு, பல வீடுகள் மழைத்தண்ணீரால்சூழ்ந்துள்ளன. இதனால் வியாதிகளும் பரவி ஆபத்து ஏற்படலாம். ஆகவே உள்ள சாக்கடைகள் சரிவர வேலைசெய்யும்படி பார்த்துக் கொள்வதுடன் இனி தேவையான சாக்கடைகளையும்கட்டவேண்டும். யாழ்ப்பாண நகரத்தில் வர வர வீடுகளும் ஜனத்தொகையும் அதிகரிப்பினும் அதற்கான அளவு சாக்கடை வசதிகள் இல்லை. மாநகரசபை அரசாங்கத்தின் உதவியைப் பெற்று செய்யவேண்டுமென்பதை இந்த வெள்ளம் அறிவுறுத்தியுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் வெள்ளம் ஏற்படுத்திய பரிதாபக் காட்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதியில் நேற்று முன் தினம் பெய்த பெருமழை பல குடும்பத்தினரை நிர்க்கதியாக்கி வீதியில் விட்டிருக்கிறது. எங்கே தஞ்சம் புகுவது என்று தெரியாமல் தத்தளித்துத் தடுமாறி அவலப்பட்டுக் கொண்டிருக்கும் குடும்பங்கள் போரில் குண்டு விழுந்தபின் நிற்பவர்களை நினைவூட்டிக்கொண்டிருக்கிறார்கள். வெள்ளத்தால் வெளியேற்றப்பட்ட நூற்றுக்கணக்கான மக்கள் ஏக்கம் தோய்ந்து வீதிகள் எங்கும் நின்றுகொண்டிருந்த காட்சி மனதை வேதனையில் தோய்த்தது.

வெள்ளம் தலைக்குமேல் போகுமளவுக்கு யாழ்ப்பாணத்தில் நிலைமை இம்முறை எதிர்பாராதவகையில் ஏற்பட்டுவிட்டது யாழ்ப்பாண நகரின் பல இடங்களில் வீடுகளில் தேங்கி நின்ற வெள்ளம் மக்களைப்போல் எங்கே போவதென்று தெரியாமல் நின்றுகொண்டிருந்தது. ஓடிய வெள்ளம் பல பொருள்களை அடித்துச் சென்றுவிட்டது. இதனால் நனைந்த துணிகளைக்கூட மாற்றமுயாத நிலையில் உணவு உண்ணமுடியாத நிலையில் பலமக்கள் வீதியால் ஓடிக்கொண்டிருந்த வெள்ளததில் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

யாழ்ப்பாண நகரப்பகுதியில் வீதிகளும், ஒழுங்கைகளும் வெள்ளக்காடாகக் காட்சியளித்தன. இதனால் வீட்டிலுள்ளவர்கள் வெளிவர முடியாமலும் வெளியிலுள்ளவர்கள் உள்ளே செல்லமுடியாமலும் இருந்தார்கள். வெள்ளம் தேங்கி நின்றுகொண்டிருந்த வீடுகளிலிருந்த சிலர் தமது முக்கிய பொருள்களைத் தலையில் வைத்துச் சுமந்து கொண்டு பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

அநேகமான வீதிகளும் ஒழுங்கைகளும் வெள்ளத்தில் மறைந்துகொண்டிருந்ததால் வாய்க்கால்களுக்கும் வீதிகளுக்கும் வித்தியாசம் கண்டுகொள்ளாத சிலர் வாய்க்காலுக்குள் விழுந்து காயமுற வேண்டிய நிலையும் சில இடங்களில் ஏற்பட்டது.

## குளங்கள் நிரம்பி வழிந்தன

யாழ்ப்பாண நகரிலுள்ள முக்கிய குளங்களான ஆரிய குளம், வண்ணான்குளம், புல்லுக்குளம், நரியன்குண்டுக்குளம, கன்னாதிட்டிக் குளம், சக்கட்டி வைரவர் குளம் ஆகியவை நிரம்பி வழிந்துகொண்டிருந்தன.

பண்ணைக்கடலில் நீர்மட்டம் பண்ணைபாலத்துடன் சமனாகிக்கொண்டிருந்ததால் போக்குவரத்து நேற்றுப் பெரிதும் தடைப்பட்டது. நேற்று மீனவர் யாரும் மீன்பிடிக்கச் செல்லவில்லை.

பண்ணைக்கு அருகிலுள்ள பொலிஸாரின் வசிப்பிடங்களில் வெள்ளம் தேங்கி நின்று குளம்போல் காட்சியளித்தது. பெரிய தபாற்கந்தோர் முன்பும் வெள்ளம் தேங்கி நின்றுகொண்டிருந்தது. யாழ்ப்பாண நகரில் உள்ள முக்கிய தியேட்டர்களில் எல்லாம் வெள்ளம் புகுந்திருந்தது.

## கால் நடைகள் இறந்து மிதந்தன

யாழ். நகர பஸ்நிலையம் வெள்ளக் காடாகக் காட்சியளித்தது. நேற்றுப் பஸ் போக்குவரத்துச் சேவை முற்றுகத் துண்டிக்கப்பட்டது. பல இடங்களில் பெரிய மரங்கள் வேரோடு சரிந்து வீழ்ந்துகிடந்தன. மார்ட்டின் வீதிச் சந்தியிலுள்ள ஒரு வீட்டிலிருந்த இரு பெரிய மரங்கள் வீதியின் குறுக்கே வீழ்ந்துகிடந்தன. மெயின் ரோட், கான்வெண்டுக்கு அருகிலும் பெரிய மரமொன்று சரிந்து வீதியின் குறுக்கே வீழ்ந்திருந்தது.

வீதியின் குறுக்கே வீழ்ந்திருந்த மரங்களை அப்புறப்படுத்துவதில் யாழ்ப்பாண மாநகரசபை ஊழியரும், பொதுமக்கள் சிலரும் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள் பல பாதைகள் குறுக்கே வெட்டப்பட்டு வெள்ளம் வழிந்து செல்வதற்கு வழிகோலப்பட்டது.

பல வீடுகளின் சுவர்கள் சரிந்து பக்கம்பக்கமாக விழுந்துகிடந்தன. நேற்று முன்தினமிரவு வீசிய கடும் காற்றும் சேதத்தை அதிகப்படுத்தியுள்ளது. பல தந்திக்கம்பங்கள் மின்சாரத் தொடர்புக் கம்பங்கள் ஆகியன இக்காற்றுக் காரணமாகச் சாய்ந்து சரிந்து கிடக்கின்றன. சில மரங்கள் தந்திக்கம்பங்களின் மேல் சாய்ந்து கிடக்கின்றன.

வெள்ளம் அதிகமாகப் பாய்ந்த இடங்களில் வீடுகளில் வளர்க்கப்பட்ட ஆடு மாடுகள், கோழிகள் ஆகியன இறந்து வெள்ளத்தில் அள்ளுப்பட்டு மிதந்துசெல்லக் காணப்பட்டது.

## பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் பலர் தஞ்சம்

யாழ்ப்பாணப் பகுதியில் வீடுகளில் வெள்ளம் புகுந்ததால் வெளியேற்றப்பட்ட ஆயிரக்கணக்கானோர் அண்மையிலுள்ள பல பாடசாலைகளில் தஞ்சம்புகுந்தனர். கொட்டடி நமசிவாய வித்தியாசாலை, அடைக்கல மாதா பாடசாலை, மடத்தடி வெங்காய ஐக்கிய சங்கம், ஆயுர்வேத கல்லூரி ஆகிய கல்லூரிகள் வெள்ள அகதிகளுக்குச் தஞ்சமளித்தன. இப்பொது இடங்களில் தஞ்சம் புகுந்தவர்களுக்குப் பல தொண்டர்களும் பொதுநல ஸ்தாபனங்களும் உணவு வழங்கின.

**கிராமங்களில்**

## நெற்பயிர்கள் மறைந்தன வாழைகள் சாய்ந்தன

கரவெட்டியில் நெல்வயல்களெல்லாம் வெள்ளத்தில் மூழ்கிக்கிடக்கின்றன, வளர்ந்து வந்துகொண்டிருந்த புகையிலைக்கன்றுகள் வெள்ளத்துள் அமிழ்ந்துகிடக்கின்றன.

நெல்லியடிக்கு அருகிலுள்ள பாணுத்தறை என்னுமிடத்தில் வெள்ளம் பெருகியதால்பலர் குடிபெயர்ந்து பொது இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளார்கள்,

நீர்வேலிப்பகுதியில் அநேகமான வாழைகள் முறிந்தும் சரிந்தும் சேதமுற்றன. பல குடிசைகள் சாய்ந்தன. நெல்வயல் வெள்ளக் காடாகவே காணப்படுகிறது.இம்முறை நெற்பயிர்ச்செய்கை நாசமாகிவிட்டதாகவே கருதப்படுகிறது. வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளதால் பலர் எங்கு செல்வதென்று தெரியாது ஏங்கித்தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

விவசாயத்கு உதவிவந்த கால்நடைகள் கதறக்கதற வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தன.

நாவற்குழி,மறவன்புலோ தச்சந்தோப்பு, கைதடி இடங்களிலெல்லாம் குளங்கள் நீர் நிரம்பி வழிந்ததால் இப்பகுதியில் வளர்ந்து வந்துகொண்டிருந்த நெற்பயிர்கள் வெள்ளத்தோடு அள்ளுப்பட்டு அடிபட்டுச் சென்றுவிட்டன. தரமான நெல்லைத் தரும் மறவன் புலோவில் இக்கதி ஏற்பட்டுள்ளதால் இவ்வருடம் இந்நெல் மக்களுக்குக் கிடையாதுபோய்விடுமென அஞ்சப்படுகிறது.

அச்சுவேலிப்பகுதியில் நாட்டப்பட்டிருந்த மரவள்ளித் தடிகள் வெள்ளத்தினால் நிலத்தில் சாய்ந்துவிட்டன. வாழைகள் முற்றுதகுலைகளுடன்முறிந்து சரிந்துவிட்டன. இங்குள்ள வெட்டுக்குளம்நீர் நிரம்பிவழிந்து கொண்டிருக்கிறது. இப்பகுதியில் வெங்காயத்தோட்டங்கள், உருளைகிசிழங்குத் தோட்டங்களெல்லாம் வெள்ளத்துள் மறைந்து கிடக்கின்றன.

உரும்பராயில் பல மரங்கள் வேரோடு சாய்ந்தன. உருளைக்கிழங்கு பயிர் வெள்ளத்தால் சேதமுற்றுள்ளது. புகையிலைக்கன்றுகளும் சேதமுற்றுள்ளன. இப்பயிர்களை நம்பி வாழும் இப்பகுதிகளிலுள்ளகமக்காரர்கள் அடுத்து என்ன விளையுமோ என ஏக்கம்கொண்டுள்ளார்கள்.

[நி]

## ஐயாறன் எழுதுவது

முந்தா நாள் இரவு தூக்கமே இல்லை. மழை கொட்டிக்கொண்டே இருந்தது. படுக்கையை எப்படி மாற்றிப்போட்டாலும் அங்கும் கொட்டியது. கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காமல், சற்றே 'தியானம்' செய்ய வாய்ப்புக் கிடைத்தது!

இப்படி விடாமல் மழை பெய்கிறதே என்று மனம் சற்று வேதனைப்பட்டுக் கொண்டிருக்கையில், ஓர் அன்பர்வந்து தன் குடும்பம் படும் கஷ்டத்தைச் சொன்னார். வீடெல்லாம் மழையால் தெப்பமானதுடன், வீட்டில் பல பாம்புகளும் நுழைந்துவிட்டதாயும், அதனால் தம் குழந்தைகளைப் பக்கத்து வீட்டுக்கு அனுப்பிவிட்டு, தானும் மனைவியும் தூங்காமல் இருந்ததாயும் சொன்னார். பாம்புப் புற்றுக்குள்ளும் வெள்ளம் புகுந்து, அதன் குடும்பமும் 'அகதிகளாகி' துணிந்து வீடுகளுக்குள் புகுந்து, சில உயிரும இழந்தனவாம், பிறர் கஷ்டங்களை அறியும்போது நாம் படும் கஷ்டம் எவ்வளவு குறைவு!

ஃ ஃ ஃ

நேற்றுக் காலையிலே ஓர் அன்பர் அவசரமாக வந்து வெள்ளத்தால் நகர மக்கள் படும் கஷ்டத்தைச சொல்லி வருந்தி, அரசாங்க அதிபரிடம் சென்று முறையிடுவதாயும், என்னையும் வருமாறும் அழைத்தார். அவருடன் சென்றேன். வழியிலே ஓரிடத்தில் ஆடு, மாடுகள் எல்லாம் மழையில் வெளியிலே கட்டப்பட்டிருந்தன. வீடுகளுக்குள் எல்லாம் வெள்ளம பாய்ந்துள்ளது. தாய்மார்களும் குழந்தைகளும் வெவ்வேறு வீட்டு வாசலில் பசியுடன் நின்றுகொண்டிருந்தனர். பாவம்! அரசாங்க அதிபர் மூலம் உணவுக்கு வகைசெய்வதாக அந்த அன்பர் ஆறுதல் கூறிச் சென்றார்.

அரசாங்க அதிபரிடம் பலரும் வந்து தங்கள் கஷ்டங்களை முறையிட்டனர். சிங்களப் பள்ளிக்கூடத்துக்குள் வெள்ளம் பாய்ந்திருந்தது. வாழை மரத்தைத் தெப்பமாக்கி சில மாணவர் அதில் ஏறிச் சென்றனர்! முதல் நாளே அதிபர் பல காரியாதிகாரிகளையும், கிராமசேவகர்களையும் அழைத்து, வெள்ளத்தால் தவிப்பவர்களுக்கு இலவச அரிசி, மாவு இவற்றைக் கொடுக்கும்படி உத்தரவிட்டார். வீடுகள் இழந்தவருக்கு 300 ரூபாய் வரை உதவிப் பணம் பின்னர் கொடுக்கப்படுமாம்.

வெளியே கிராமங்களில் தான் சேதம் அதிகமாம். பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி, அதனால் இம்முறை சாகுபடியே இல்லாமற் போகுமென்றும் பல புகார்கள் கிடைத்துள்ளன

நகரில் வீடிழந்து பசியால் கஷ்டப்படுபவர்களுக்கு உடனடியாக, கோவில்களில் கஞ்சி காய்ச்சி கொண்டு கொடுக்கச் செய்யக் கூடாதா? எல்லாம் அரசாங்கமே எப்படிச் செய்ய முடியும்? இங்கு இவ்வித சமயங்களில் சமூகசேவை செய்யக்கூடிய தொண்டர் படை இல்லாதது பெரிய குறை,

ஃ ஃ ஃ

உடன் ஆயிரம் ருத்தல் பாண் சரிக்கட்ட முடியுமா என்று காரியாதிகாரி அவசரமாக டெலிபோனில் பேசினார். மறுநாள்தான் முடியுமென்று பதில் கிடைத்தது. ஆங்காங்கே வீட்டு வசதியுடன் உள்ளவர்கள், கூட்டாகச் சமைத்து வெள்ள அகதிகளுக்கு அன்னம் முதலானவை கொடு

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.

AGENTS

ரேயல் டிஸ்பென்ஸரி

PHONE 397 JAFFNA

# கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

## அறிவித்தல்

இக்கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்டுள்ள கடதாசி வியாபாரிகளுக்கும் மற்றும் தீவு பூராவுமுள்ள ப. நோ. கூ. ச. சமாசங்களுக்கும் எதிர்வரும் பாடசாலைப் புதுவருட பருவத்தின் தேவையை பூர்த்திசெய்யக்கூடிய வகையில் 40 மற்றும் 80 பக்கங்கள் உடைய பலதரக் கோடிடப்பட்ட மாணவர் அப்பியாசப் புத்தகங்களை கையிருப்பில் வைத்து மொத்த விலையில் விற்பனை செய்வதற்கு போதியளவு கையிருப்புகள் கிடைக்கக்கூடிய வகையில் ஒழுங்கு செய்யப்படும்.

இக்கூட்டுத்தாபனத்துடன் பதிவுசெய்துள்ள சகல எழுதுகருவி விற்பனையாளர்களும் மற்றும் ஏனையவர்களும் மொத்த வியாபாரிகளிடமிருந்தும் மற்றும் ப. நோ. கூ. ச. சமாசங்களிடமிருந்தும் மொத்தவிலைகளில் அப்பியாசப் புத்தகங்கள் பெற்றுக்கொள்ளலாம். 22—7—65-இல் அரசாங்க அதிவிசேட வர்த்தமானி இல. 14,457 இல் பிரசுரிக்கப்பட்டுள்ள 1965-ம் ஆண்டின் அப்பியாசப் புத்தகங்களின் விலைகள் கட்டுப்பாட்டுக் கட்டளை இல. 1-இல் கூறப்பட்டுள்ள அப்பியாசப் புத்தகங்களின் மொத்த விலைகள் ஆவன:-

40 பக்கங்கள் - ஒரு குரோஸ் ரூபா 18/- சகல கோட்
80 பக்கங்கள் - ஒரு குரோஸ் ரூபா 36/- டினங்களும்

1965-ம் ஆண்டின் அப்பியாசப் புத்தகங்களின் விலைக்கட்டுப்பாட்டுக் கட்டளை இல. 1-இல் கூறப்பட்டுள்ளபடி பின்வரும் உச்ச சில்லரை விலைக்குமேல் அப்பியாசப் புத்தகங்கள் விற்பனை செய்யக்கூடாது.

40 பக்கங்கள்
ஒரு டசின் ரூபா 1-80 அல்லது
ஒரு புத்தகம் -/15
80 பக்கங்கள்
ஒரு டசின் ரூபா 3-60 அல்லது
ஒரு புத்தகம் -/30
} சலக கோட்டினங்களும்

பாடசாலைகளுடன் தொடர்புள்ள பாடசாலை கூட்டுறவு சங்கங்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள், பொதுநல ஸ்தாபனங்கள் ஆகியவை அப்பியாசப் புத்தகங்களை பெற்றுக் கொள்ள விரும்பின் அவர்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்களுக்கு அண்மையிலுள்ள மொத்த வியாபாரியுடன் அல்லது ப. நோ. கூ. ச. சமாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

போதியளவு கையிருப்பு இருக்கின்றபடியால் அப்பியாசப் புத்தகங்களை மொத்த விலைக்கு மொத்த வியாபாரிகளிடமிருந்தோ அல்லது சில்லரை விலைக்கு சில்லரை வியாபாரிகளிடமிருந்தோ கொள்வனவு செய்ய ''அனுமதிப் பத்திரங்கள்'' தேவையில்லை.

பொது முகாமையாளர்
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

135, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2
4-12-1967 359

திருவெம்பாவை பூஜைக்கு

தேவையான

* விளைவுகூடம்
* அபிஷேக திரவியங்கள்
* அபிஷேகச் சந்தனம்
[உடன் யந்திரத்தினால் அரைக்கப்பட்டது]
* அபிஷேகக் குங்குமம்
* அபிஷேக விபூதி
* அபிஷேக வாசனாதிகள்
* கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்திகள்
* நைவேத்தியப் பொருட்கள்

மற்றும்

சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த 35 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து நற்பெயர் பெற்றவர்கள்.

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனாதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். ரோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு இழந்தவர்களுக்கு ரூ. 300 வரை கிடைக்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி

இக்கடும் மழையினாலும், மழையுடன் கூடிய பேய்க் காற்றினாலும் நேற்று வட பகுதியில் 100-க்கு 75 சத விகிதமான மக்கள் பெரு வெள்ளத்தினால் வீடுகளை இழந்து பொது நிலையங்களில் தஞ்சம் புகுந்துள்ளனரென சமூக சேவைப்பகுதி அறிவித்துள்ளது.

வடபகுதியில்வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் வெள்ள நிவாரண நிதியைப் பெருந் தொகையாக ஒதுக்கத்திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. வீடுகளை இழந்தவர்களுக்கு ஆளுக்கு 300 ரூபா வரை கொடுக்கப்படவிருக்கிறது.

வெள்ளத்தால் மூழ்கடிக்பட்ட பகுதிகளையும், பொது நிலையங்களில் தஞ்சம் புகுந்த மக்களையும் நேற்று அரசாங்க அதிபர் நேரில் சென்று பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட இடங்களையும், மக்களின் தொகையையும் கணக்கெடுத்த அரசாங்க அதிபர் யாழ். அயுர்வேத கல்லூரியில் தஞ்சம் புகுந்த மக்களிடம், 'பயப்படாதீர்கள்' என்னால் ஆன உதவிகளைக்கூடியளவு சீக்கிரம் செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். கூடிய சீக்கிரம் சமையலுக்கு வேண்டிய பொருட்களை அனுப்பிவைக்கிறேன், நீங்கள் இழந்த வீடுகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படும்' என்றார்.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் குருநகர், றெக்ளமேஷன் பகுதி, ஈச்சமோட்டைப் பகுதி, தாராக் குளம் பகுதி, நல்லூர் தெற்குப் பகுதி, அரியாலை யாழ். முஸ்லிம் வட்டாரம் ஆகிய இடங்கள் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

### மரம் விழுந்து வீடுகள் சேதம்

நல்லூர் தெற்கில் பழம் பெரும் மரங்கள் பாறி விழுந்ததினால் பெரும் வீடுகள் சேதத்துக்குள்ளாகின. இப்பகுதியில் நூற்றுக்கணக்கான மக்கள் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் தஞ்சம்புகுந்துள்ளனர்.

குருநகர், றெக்ளமேஷன் பகுதியில் குடிசைகள் மேலாக வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்கிறது. யாழ் நகரின் முக்கியவீதிகள் பலவும் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டு நதிகளின் கிளைகள் போன்று காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. இதனால் மின்சாரக் கம்பங்களும், டெலிபோன் தொடர்புக் கம்பங்களும் சாய்ந்தும், வீழ்ந்தும் கிடந்தன.

பஸ் போக்குவரத்துச் சேவை நடைபெறாததால் அரசாங்க அலுவலகங்களிலும் மற்றும் தனியார்ஸ்தாபனங்களிலும் குறைவான ஊழியர்களே கடமையாற்றிக்கொண்டிருந்தனர். தனியார் ஸ்தாபனங்கள் பல மூடப்பட்டுக்கிடந்தன.

நேற்று யாழ்ப்பாணத்தில் பாணுக்குப் பலத்த கிராக்கி ஏற்பட்டிருந்தது. சில பேக்கரிகளில் 'பாண் இல்லை' என்று கைவிரிக்கப்பட்டது.

நல்லூரில் வெள்ள அகதிகளுக்கு மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் புகலிடம் அளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு நல்லூரைச் சேர்ந்த தொண்டர்கள் உணவு வழங்கினர்.

சுன்னாகச் சந்தையில் வெள்ள அகதிகள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

---

### அரசாங்க கேள்விகள்

பொதுவேலைத் திணைக்களம்

என் 3541- (1) வவுனியாவில் மதுவரிப் பகுதியினருக்கு வாகன அறையும், மதுவரிக் களஞ்சிய சுமைக்காறன் காவல்காறருக்கு ஒய்வுபெறும் அறையும் கட்டுதல். (2) மன்னார் நீதவான் பங்களா மலசல கூடத்திற்குவடிகால் அமைத்தல். கேள்விகள் முடிவு திகதி 27-12-67.

இதன் முழு விபரங்களுக்கும் 8-12-67இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம்பகுதி, 11-ம் தொகுதியைப் பார்க்கவும்.

### விற்பனைக்கு

மில்

26 h. p. பிளாக்ஸ்ரோன் லிஸ்ரர் புதிய என்ஜின், ஹலர், கிறைன்டர்கள், மரஅரிவு பட்டடை உபகரணங்கள் உள்அடக்கிய மில் மண்டபம் விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு. தொடர்பு கொள்க. R. சுவாம்பிள்ளை, அகுத்தர் ஒழுங்கை இளவாலை. 2156

காணி:

திருநெல்வேலிச் சந்தியிலிருந்து கொக்குவில் ஸ்ரேசனுக்கு போகும் வீதியில் கல்லுடைக்கும் மெசினுக்கு முன்பாக கிணற்றுடன் கூடிய காணி பரப்பு 4 1/2 உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். கை. மங்களேஸ்வரன், கனகராயன்குளம், மாங்குளம். 2163

### வாடகைக்கு

வீடு:

இரு படுக்கையறைகளுடன் வடிகால் வசதி, குழாய் நீர்வசதி, மின்சார வசதிகளுட்பட வீடு ஒன்று 1968 தை மாதத்திலிருந்து வாடகைக்குக் கொடுக்கப்படும். ஆஸ்பத்திரி, தபாற்கந்தோர், இராமநாதன் கல்லூரி ஆகியவற்றிற்குச் சமீபமாக மருதனமடம் சந்திக் கருகாமையில் உண்டு. விபரங்களுக்கு ஸ்ரீமதி வ. பொன்னுத்துரை, கூடல், ஆனைக்கோட்டை. 2162

---

### ஐயாறன்...

[2-மபக்கத் தொடர்ச்சி]

க்க ஏற்பாடு செய்தால், இந்த தர்மம் தலைகாக்கும்.

ஃ ஃ ஃ

குறிப்புகள்:-

சில இடங்களில் கோழி, வாத்துகள் வீடுகளிலிருந்து மழையால் வெளிவந்த போது, சிலர் அவற்றைப் பிடித்துக்கொண்டு போய் விட்டார்களாம்!

ஃ ஃ ஃ

பல இடங்களில் டெலிபோன் வேலை செய்யவில்லை. மின்சாரமும் நேற்று காலைக்கு மேல் நின்றுவிட்டது,

ஃ ஃ ஃ

இலவச அரிசி கொடுக்கும்படி அதிபர் உத்தரவிட்டும், சில இடங்களில் 'ஸ்டோர் கீப்பர்கள்' மழை காரணமாக வேலைக்கு வரவில்லை. அதனால் அதற்குத் தடை ஏற்பட்டது! அதிகாரி, ஸ்டோர் கீப்பர்களின் வீடு தேடிச் சென்று அவர்களை அழைத்துவந்து விநியோகிக்கவேண்டியதாயிற்றாம்.

---

### 10லட்சம் ஒதுக்கீடு

கொழும்பு, வெள்ளி

வெள்ள நிவாரண வேலைகளுக்கென உடனடியாக ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாக சமூகசேவைப் பகுதி டைரக்டர் திரு. ஆர். எஸ். திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசனத்துக்கு உதவும் குளங்களைத் திருத்துவதில் தீவிர கவனம் செலுத்துமாறு காணி நீர்ப்பாசன அமைச்சு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.

# பல பாடசாலைகள் சேதமுற்றன

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளின் முக்கிய பகுதிகள் வெள்ளம் காரணமாக இம்முறை முன்னர் எப்பொழுதும் ஏற்படாதவகையில் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களைப் பாடசாலைப் பரிசோதகர் மூலம் நேரடிமதிப்பீடு எடுத்து தேவையான தொகையை யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கவேண்டிய நடவடிக்கைகளை வடமாநில கல்வி அதிகாரி எடுத்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டஆசிரியர்களுக்கு கஷ்டநிவாரண நிதி பெற்றுத்தரவும் அதிகாரி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

நேற்றுப் பல பாடசாலைகளில் ஆசிரியர்களும் மாணவர்களும்வரவில்லையெனவும் இவர்கள் மீது எவ்விதநடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில பாடசாலைகள் அகதிகள் முகாமாகப் பாவிப்பதற்கு காரியாதிகாரிகளின் வேண்டுகோளின் பேரில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கல்விக்காரியாலய அதிகாரி தெரிவித்தார்.

நேற்று கல்விக் கந்தோரிலும் 75சத விகிதமான ஊழியர்கள் வரவில்லையெனத் தெரியவருகிறது.

சுன்னாகம்-கந்ததரோடை வீதியிலுள்ள பலர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு வீடு வாசல்களை இழந்தனர். கால்நடைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. சில வீடுகளில் வெள்ளம் புகுந்ததன் காரணமாக அங்குள்ளோர் லொறிமூலம் வெளியிடங்களுக்கு ஏற்றிச் செல்லப்பட்டனர். சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் திரு. பி. நாகலிங்கம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர் களுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரணம் பற்றி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கு முன்னால் நின்ற பெரிய அரசமரம் வேருடன் பாதையில் விழுந்துள்ளது.

---

யாழ். ஆஸ்பத்திரி

### பிரசவ வார்ட்டில் வெள்ளம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பெரியஆஸ்பத்திரியின் சில பகுதிகளுள் வெள்ளம்புகுந்துகொண்டது இதனால் நோயாளிகள் இடமாற்றம் செய்யப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

பிரசவ வார்ட்டில் வெள்ளம் புகுந்ததால் கீழ்வார்ட்டில் இருந்த கர்ப்பிணிகள் மேல்மாடியிலுள்ள வார்ட்டுக்கு மாற்றம் செய்யப்பட்டார்கள்.

---

### மரண அறிவித்தல்

இளைப்பாறிய ஆசிரியர்

இராசரத்தினம்

இராசரத்தினம்- இளைப்பாறிய தலைமையாசிரியர் காலமானார். காலஞ்சென்ற இராசம்மாவின் கணவரும், நடராசா, நவரெத்தினராசா, ஜெயரெத்தினராசா, செல்வராசா, விக்னேஸ்வரன், பாலாம்பிகை, ஞானம்பிகை, விக்னேஸ்வரி ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற வேலாயுதம், சஞ்சீவலிங்கம், இராசரெத்தினம், புவனேஸ்வரி, ஞானசக்தி, ஜெயலக்சுமி ஆகியோரின் மாமனாரும்ஆவர். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக 8-12-67 காலை 9 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்துக்கு 18, சிவப்பிரகாசம் வீதியில் இருந்து எடுத்துச்செல்லப்படும்.

தகவல்

இ. நவரெத்தினராசா

சுங்கப்பகுதி,

கொழும்பு.

---

# மட்டக்களப்பு, திருமலை, சிலாபம் தொடர்பு துண்டிப்பு

## கொழும்புத் துறைமுகத்திலும் வேலைகள் நிறுத்தப்பட்டன

### நாடுமுழுவதும் மழை, புயல் சேதம்

கொழும்பு, வியாழன்

நேற்று 24 மணிநேரமும் இலங்கையின் பல பகுதிகளிலும் பலத்த மழையுடன் பேய்க்காற்றும் வீசியதால் திருகோணமலை, வவுனியா மட்டக்களப்பு, யாழ்ப்பாணப் பகுதிகளில் என்றுமில்லாதபடி பலத்த சேதமும் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது. சிலாபப் பகுதியில் மழையும் காற்றும் பெரும்சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

திருகோணமலையிலும்,வவுனியாவிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம்புகுந்துள்ளனர்.

அநேக வீடுகள் நீரில் மூழ்கியுள்ளதால் இழந்தபொருட்களை மீட்பதில் மக்கள் பெரும் கஷ்டம் அடைகின்றனர்.

அம்பாறை, இங்கினியாகலை

[illegible]

அக்கரைப்பற்று, நிந்தவூர் கல்முனைப்பகுதிகளில் பெரு வெள்ளம் ஏற்பட்டதுடன் வீதிகளின் மேலாக சுமார் 6 அடி தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. இப்பகுதிகள் மட்டக்களப்புடன் எதுவித தொடர்பும் கொள்ளமுடியாத நிலையில் துண்டிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்புக்கும் அதை அடுத்துள்ள சகல பகுதிகளுக்கும் பஸ், ரயில், டெலிபோன் தந்திப் போக்குவரத்துக்கள் எல்லாம் துண்டிக்கப்பட்டமையால் மட்டக்களப்பிலுள்ள அரசாங்க அதிகாரிகளுடன் எதுவித அவசிய அலுவல்களுக்கும் தொடர்புகொள்ள முடியாத நிலையேற்பட்டுள்ளது.

கல்முனை, காரைதீவு, மணல்சேனை, நாற்பிட்டிமுனைப்பகுதிகளில் உள்ள மக்கள் பாடசாலைகளிலும் கோவில்களிலும் தஞ்சம் [...]ந்துள்ளனர்.

கொழும்பு மட்டக்களப்பு ரயில்சேவை பாதிக்கப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு யாழ்ப்பாண புகையிரத சேவையும் நிறுத்தப்பட வேண்டிய நிலை நேரிட்டுள்ளது.

திருக்கோணமலை மட்டக்களப்பு புகையிரதங்கள் யாவும் பளுகஸ்வெவ மட்டும் சென்கின்றன.

மதவாச்சியில் வெள்ளப்பெருக்கு அதிகரித்துள்ளது. புகையிரத பாதைகளும் பிரதான வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அனுராதபுரம், மன்னார்பஸ் போக்குவரத்து சேவைகள் துண்டிக்கப்பட்டன. வவுனியா மதவாச்சிப்பகுதிகளில் பிரதான வீதிகளில் மரங்கள் விழுந்துள்ளதால் போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்துவிட்டன.

கொழும்பில் கடும்காற்றும், பலத்த மழையும்பெய்வதால் நேற்றுமுதல் துறைமுக போக்குவரத்துக்களும் ஏற்றுமதி இறக்குமதிகளும் ஸ்தம்பிக்கப்பட்டன.

கோயில் தேவைகளுக்கும், விவாகம் முதலிய விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான

அபிஷேக சந்தனம்

கோயில் அபிஷேக திரவியங்கள், வாசனைமிக்க பன்னீர் பரிமளம் நிறைந்த சந்தன வில்லைகள்

விலைவு தூடம்

கிடைக்குமிடம்

சுந்தரம் பிரதர்ஸ்

மருந்துச்சரக்கு வியாபாரம்

[புதிய பஸ் நிலையத்துக்கு அருகாமை]

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org